# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2018 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*(2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2018, ஒகத்து மாதம் 03 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** *II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2018 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தச்) சட்டம்**

[2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத் தப்பட்டது]

ச.வ.- ஓ. 11/2018

**2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1***. இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

***2***. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவானது (1) ஆம் உட்பிரிவில் இத்தால் திருத்தப்படுகின்றது:-

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(ஆ) இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஒரு கூட்டாதனத் துண்டு:

ஆயின், மொத்த பெறுமதி இயைபான கைமாற்றல் உறுதியின் நிறைவேற்றத்திற்கு முன்னர் உட்திரும்பல் வெளிநாட்டு அனுப்பு தொகை ஊடாக வெளிப்படையாக செலுத்தப் படல் வேண்டும்;";

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் "அந்த ஏதேனும் காணிக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அந்த ஏதேனும் காணிக்கு; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை சேர்ப்பதன்மூலமும்:-

"(ஐ) கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்ட 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனி ஒன்றிற்கு 2018 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் எந்தக் காணியின் உரித்து கைமாற்றப்படுகின்றதோ அந்த ஏதேனும் காணிக்கு.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5அ என்னும் பிரிவினைத் திருத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5அ என்னும் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது :-

(அ) "2017 சனவரி 8 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2016 சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்";

(ஆ) அதன் ஓரக்குறிப்பில் "2017 சனவரி 8 ஆந் தேதியிலிருந்து" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2016 சனவரி 1 ஆந் தேதியிலிருந்து" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*